**மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின கொடுக்கல் வாங்கல் தொடர்பான அறிக்கை - 2021, 2022 மற்றும் 2023**

---

மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் 2021, 2022 மற்றும் 2023 திசெம்பர் 31 ஆந் திகதிகளில் முடிவடைந்த மூன்று ஆண்டுகளுக்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசசட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என கருதப்படுகின்ற மீளாய்வாண்டிற்கான சபையின் செயற்பாடுகள் சம்பந்தமான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்புக்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்தினால் அந்த நிறுவனம் சம்பந்தமாக வருடாந்தம் மற்றும் காலரீதியாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தமது வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சம்பந்தமாக முறைப்படியாக ஏடுகளையும் அறிக்கைகளையும் பேணுதல் அத்தியவசியமானதாகும். அந்த அதிகாரச் சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படுகின்ற ஒவ்வொரு நிறுவனம் சம்பந்தமான வருடாந்த நிதிக்கூற்றுக்களானது சட்டத்தினால் காட்டக்கூடிய வகையிலான காலப்பகுதியில் அந்த நிறுவனத்தின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையுடன் சேர்த்து பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அந்த அதிகாரச்சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கையும் ஏனைய நிதிக்கூற்றுக்களும் தேவையான காலப்பகுதிக்குள் தயாரிக்கப்படுகின்றன என உறுதிப்படுத்தப்பட வேண்டியதுடன் அதற்கு மேலதிகமாக ஆண்டறிக்கையினை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

**2 நிதிக்கூற்றுக்கள்**

**2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அராங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு மற்றும் 2004 பெப்ரவரி 24 ஆந் திகதிய 01/2004 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு ஆண்டறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அண்ணளவாக 05 ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்கள் சில ஆண்டுகள் தாமதித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்களும் வரைபு ஆண்டறிக்கையும் 2024 திசெம்பர் 30 ஆந் திகதி வரையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2 கணக்குப் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளைப் பேணுதல்**

சபையின் நடவடிக்கைகள் தொடர்ச்சியாகப் பேணப்பட்டிருந்தும் அறிக்கையில் குறிப்பிட்ட ஆண்டுகள் தொடர்பான பேரேட்டுக் கணக்குகள், ஏடுகள், பதிவேடுகள் என்பன பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் காணப்படுதல்

சபையினால் கடைசியாகத் தயாரித்த 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுகின்ற சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவுகள் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றன.

| | பெறுமதி (ரூபா) |
|---|---|
| **சொத்துக்கள்** | |
| நடைமுறையற்ற சொத்துக்கள் | 1,963,257,721 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 948,969,760 |
| முழுச் சொத்துக்கள் | 2,912,227,482 |
| **பொறுப்புக்கள்** | |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 2,953,451,992 |
| நடைமுறையற்ற பொறுப்புக்கள் | 883,608,025 |
| முழு பொறுப்புக்கள் | 3,837,060,017 |
| தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனம் | (924,832,535) |
| முழு வருமானம் | 1,129,930,153 |
| முழு செலவுகள் | (1,478,322,769) |
| பொறுப்புக்கள் | (348,392,616) |

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | அவதாளிப்புக்கள் |
|---|---|---|---|---|
| (அ) | 2003 யூன் 02 ஆந் திகதிய 12 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பிரிவு | நிதி ஆண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் நிறுவனம் சம்பந்தமான செயல் நடவடிக்கைத் திட்டத்தினை தயாரித்து பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பின்னர் வரிசை அமைச்சு அரசாங்க தொழில் முய்றசிகள் தொடர்பான திணைக்களம், பொதுத்திறைசேரி மற்றும் கணககாய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் 2021 ஆம் | 2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கான செயல்நடவடிக்கைத் திட்டங்கள் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் கணக்காய்விற்கு அந்த ஆண்டுகளின் செயல்நடவடிக்கைத் திட்டங்களை முடியுமான அளவு விரரைவாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தினை நிர்ணயிக்கப்பட்ட திகதியில் நிர்ணயிக்கப்பட்ட முறைமையின் பிரகாரம் தயாரித்தல் உரிய நிறுவனத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டமானது கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. 2021 திசெம்பர் 15 ஆந் திகதியாகும். 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான செயல்நடவடிக்கைத் திட்டங்கள் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | | |
| (ஆ) | 2014 பெப்ரவரி 11 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 5.1 ஆம் பிரிவு | ஒரு நிறுவனத்தினால் ஆகக்குறைந்தது மூன்று ஆண்டுகளுக்காக ஒரு கூட்டிணைந்த திட்டத்தினை தயாரித்து அதற்கிணங்க உத்தேச இலக்கினை அடைந்து தொழில் முயற்சியினை செயற்படுத்துதல் பணிப்பாளர் சபையின் முழுமையான பொறுப்பாவதுடன் அவ்வாறு தயாரிகப்படுகின்ற கூட்டிணைந்த திட்டத்தினை பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் உரிய அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்காக கூட்டிணைந்த திட்டத்தினை தயாரித்து உரிய அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தொழில் முயற்சி திட்டத்தினை தயாரிப்பதற்காக மற்றும் கொடுப்பனவு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் கிடைத்துள்ளதனால் உரிய நவடிக்கைகளை மேற்கொள்ளும் போது கொடுப்பனவு நடவடிக்கைகள் அதற்கிணங்க மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சபைக்காக கூட்டிணைந்த திட்டத்தினை தயாரித்து உரிய அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2006 தேசிய பெறுகை முகவராண்மையின் | பெறுகை வழிகாட்டிக் கோவையை பின்பற்றாது 2022 - 2024 | நிறுவனத்திடம் நிதிப் பிரச்சினை காணப்பட்டதனால் | பெறுகை வழிகாட்டிக் கோவையின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | மூலம் வழங்கப்பட்ட பெறுகை வழிகாட்டிக் கோவையின் 03 ஆம் பிரிவு | காலப்பகுதிக்காக ஒரு தொழில் முய்றசித் திட்டத்தினை தயாரிப்பதற்கு 2021 திசெம்பர் 21 ஆந் திகதி ஒரு தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு சபையினால் இச்சேவைக்காக 2021 திசெம்பர் மாதத்திலிருந்து 2022 மே மாதம் வரை ரூபா 2,025,000 செலுத்தப்பட்டிருந்தது. அந்த நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட அறிக்கையில் நடைமுறையில் அமுல்ப்படுத்த முடியாத குறிக்கோள்கள் மற்றும் செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்டிருந்ததன் காரணமாக பெருந்தோட்ட அமைச்சினால் அது அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த அறிக்கை 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையும் அமுல்ப்படுதப்பட்டிருக்காததுடன் அதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவு ஒரு விளைவற்ற செலவாக மாறியிருந்தது. அவ்வாறே இச்செயற்பாடு தொடர்பான நிகழ்கால நிலைமை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | கொவிட் காலத்தில் தொழிற்பாட்டு மூலதனத் தேவைப்பாட்டிற்காக ஒரு வங்கிக் கடனை துரிதமாகப் பெற்றுக்கொள்வதற்காக ஒரு கூட்டிணைந்த திட்டத்தினை சதமர்ப்பிக்க வேண்டியிருந்ததுடன் மேற்கூறிய தேவைப்பாட்டிற்காக ஒரு வெளித்தரப்பினருக்கு வழங்கி திட்டத்தினை தயாரித்து வரிசை அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டது. அதில் சில குறைபாடுகள் இருந்ததனால் அதனை தயாரித்து மீண்டும் சமர்ப்பிக்குமாறு அமைச்சு தெரியப்படுத்தியுள்ளது. மேற்கூறிய கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டுள்ளது. | பிரகாரம் சேவையினை நிறைவேற்றுவதற்காக தேவையான வசதிகளுடன் அனுபவமுள்ள ஒரு நிறுவனத்தை தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2020 சனவரி 27 ஆந் திகதிய நிதி பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சின் PED 01/2020 ஆம் இலக்க சுற்றறக்கையின் 1.2 ஆம் பந்தி | ஒரு தலைவருக்கு ஒரு உத்தியோகபூர்வ வாகனம் அல்லது மாதாந்த போக்குவரத்து படி ஆகிய இரண்டில் ஒன்றுக்கு மாத்திரம் தகமையுள்ளதாக இருந்த போதிலும் தலைவருக்கு ஒரு உத்தியோகபூர்வ வாகனத்தை வழங்கி | 2020 சனவரி மாதத்திலிருந்து 2020 நவம்பர் மாதம் வரை PED/01/2015 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் தலைவரின் எரிபொருளுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைக்கு முரணாக உத்தியோகபூர்வ வாகனம் மற்றும் போக்குவரத்து படி ஆகிய இரண்டு வசதிகளையும் வழங்குவதற்காக மற்றும் முறையான அங்கீகாரமின்றி மேலதிக |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 2020 ஆம் ஆண்டிலிருந்து 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை போக்குவரத்துப் படியாக ரூபா 2.35 மில்லியன் சபையினால் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே தலைவருக்கு ஒரு மாதத்திற்கு தகமையுள்ள எரிபொருள் அளவு 150 லீற்றராக இருந்த போதிலும் இதற்கு மேலதிகமாக இன்னும் 100 லீற்றர் எரிபொருளினை உள்ளடக்கி எரிபொருள் படியாக ரூபா 50,000 இனை வழங்குவதற்காக 2020 திசெம்பர் 11 ஆந் திகதிய 09 ஆவது பணிப்பாளர் சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த எரிபொருள் படியானது அவர் மாதாந்தம் பெற்றுக்கொண்ட தலைவர் படியுடன் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2020 மார்ச் மாதத்திலிருந்து 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை சுற்றறிக்கையில் அங்கீகரித்த எரிபொருள் எல்லையினை மிகைத்து ரூபா 1,819,131 பெறுமதியான 7,491.16 லீற்றர் எரிபொருள் தலைவரினால் பயன்படுத்தப்பட்டுள்ளது என அவதானிக்கப்பட்டது. | 2020 இலிருந்து 2023-12-31 ஆந் திகதி வரையான எரிபொருள் படி ரூபா 50,000 தொகை பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதுடன் அந்த பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்கு நிதி அமைச்சின் பிரதிநிதித்துவமும் அப்போது காணப்பட்ட வரிசை அமைச்சின் பிரதி நிதித்துவமும் இருந்தது.<br><br>தலைமை அலுவகத்திலிருந்து ஒவ்வொரு தோட்டத்திற்குமுரிய தூரத்தின் அளவானது அனைத்து தோட்டங்களுக்கும் பயணம் செய்வதனை உள்ளடக்கி பயணம் செய்யும் போது ஒரு தடவைக்கு போவதற்கும் வருவதற்குமான தூரத்தின் அளவு 7476 கிலோ மீற்றர்களாகும். தலைவர் பெற்றுக்கொண்டுள்ள ரூபா 1,819,131 ஆன எரிபொருள் செலவானது நியாயமான பெறுமதியாக உள்ளது. | எரிபொருளுக்காக கொடுப்பனவுகளை சிபாரிசு செய்து அங்கீகரித்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் மிகைக் கொடுப்பனவுகளை உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2015 மே 25 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 2 மற்றும் 3.1 ஆம் பந்திகள் | சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்க தொழில் முயற்சியின் தலைவர் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் முகாமைத்துவ பணிப்பாளர் நிறைவேற்று பணிபாளர், பணிப்பாளர் நாயகம் பிரதான நிதி | மக்கள் பொருந்தோட்ட அபிவிருத்திச் சபை தோற்றுவிக்கப்பட்ட 1972 இன் 11 ஆம் இலக்க கமத்தொழில் அதிகாரச்சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கு இணங்க இந்த நிறுவனத்தில் மேற்கூறிய | தொடர்புபட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் எரிபொருள் மற்றும் போக்குவரத:து படிகள் செலுத்தப்பட வேண்டியதுடன் தேவையான திருத்தங்கள் |

உத்தியோகத்தர் மற்றும் மகாமைத்துவ சேவைகள் சேவைகள் திணைக்களம் அங்கீரித்துள்ள HM 1-1 தரத்திலுள்ள அல்லது அதற்கு மேல் மட்டத்திலுள்ள பதவியினை வகிக்கின்ற எந்தவொரு உத்தியோகத்தருக்கும் உத்தியோகபூர்வ வாகனத்தை பெற்றுக்கொள்வதற்கு தகமை கிடைக்கின்றது எனவும் உத்தியோகபூர்வ வாகனத்தை பெற்றுக்கொள்வதற்கு தகமையுள்ள உத்தியோகத்தர்களுக்கும் உரிய எரிபொருள் படிக்கு தகமையுள்ள போதிலும் சபையினால் இச்சுற்றறிக்கைக்கு இணக்கமற்ற வகையில் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போது எரிபொருள மற்றும் போக்குவரத்து படிகளுக்கு தகமையற்ற 16 உத்தியோகத்தர்களுக்கு முறையே ரூபா 8.6 மில்லியன் மற்றும் ரூபா 12.3 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே 2023 ஆம் ஆண்டில் 11 உத்தியோகத்தர்களுக்கு எரிபொருள் மற்றும் போக்குவரத்து படிகளாக ரூபா 10.25 மில்லியன் சபையினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே எரிபொருள் மற்றும் போக்குவரத்து படிக்கு தகமையற்ற பதவிகளுக்கு உத்தியோகத்தர்களைச் சேர்த்துக்கொள்ளும் போது நியமனக் கடிதத்தில் அப்படிகள் செலுத்தப்படும் எனக்

உத்தியோகத்தர்களுக்கு போக்குவரத்துப் படியினை வழங்குவதற்கு பணிப்பாளர் சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய அதிகாரச்சட்டத்தின் 5.b, 5.e. 8.8(1)(b), 8.1(b) ஆகிய உபபிரிவுகளின் கீழ் அவ்வாறான தீர்மானங்களை எடுக்கும் இயலுமை நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்கு கிடைத்துள்ளது. மேலும் இந்த உத்தியோகத்தர்கள் தலைவர், பணிப்பாளர் சபை மற்றும் பொது முகாமையாளர் பதவிகளைத் தவிர்த்து வேறு எந்த பதவியும் உள்ளடக்கப்படாமையால் இந்த உத்தியோகத்தர்களின் பதவிகளுக்குரிய கடமைகளின் தன்மையின் அடிப்படையில் அவற்றிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளுக்கு மேலதிகமாக மேற்கூறிய பதவிகளின் எல்லைக்கு அப்பால் சென்று மேற்கூறிய கடமைகளை நிறைவேற்ற வேண்டி ஏற்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக இந்த படிகள் செலுத்தப்படுகின்ற உத்தியோகத்தர்களில் சிலரின் நியமனக் கடிதங்களில் அவர்களுக்கு இந்த படிகள் செலுத்தப்படும் என்ற நிபந்தனை உள்ளடக்கப்பட்டுள்ளது. நியமன கடிதங்களுக்குரிய ஊழியர் படிகளை

சுற்றிக்கையில் குறிப்பிட்டவாறு அங்கீகாரத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| | | குறிப்பிட்ட சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன. | வழங்குவதற்கு தொழில் தருனர் கட்டுப்பட்டுள்ளதுடன் நியமனக் கடிதங்களின் பிரகாரம் அந்த உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதுடன் அந்த தரத்திலுள்ள ஏனைய உத்தியோகத்தர்களுக்கு ஏற்படுகின்ற முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்கு ஏனைய உத்தியோகத்தர்களுக்கு இப்படிகள் செலுத்தப்பட்டது. | |
| (ஊ) | 2010 பெப்ரவரி 03 ஆந் திகதிய SP/RD/02/10 ஆம் இலக்க சனாதிபதி செயலக சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தி | அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டியுள்ள காணிகளின் வருமானங்கள் முறைப்படியாக அறவிடப்படுகின்றது என்பதற்கு அனைத்து அரசாங்க நிறுவனங்களின் தலைவரகள் பொறுப்பாக இருக்கவேண்டியதுடன் அரசாங்கத்தின் காணிகளை குத்தகைக்கு வழங்குதல், விற்பனை செய்தல் மற்றும் வெகுமதிப் பத்திரத்தின் மூலம் வெளியாருக்கு வழங்கும் போது பெறுமதி / குத்தகைப் பணத்தை அறவீடு செய்தல் அரசாங்கத்தின் பிரதான மதிப்பீட்டாளரிடமிருந்து பெறுக்கொள்ளப்பட்ட மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையினால் வெளித்தரப்பினர்களுக்கு குத்தகை அடிப்படையில் அல்லது வாடகை அடிப்படையில் வழங்கிய | மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையினால் வெளித்தரப்பினர்களுக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள காணிகள் மற்றும் கட்டிடங்கள் 193 ஆனதுடன் 115 காணிகள் மற்றும் கட்டிடங்களின் குத்தகை உடன்படிக்கைகள் செயற்படும் நிலையில் காணப்பட்டது. அவற்றில் சில காணிகள் மற்றும் கட்டிடங்களானது குத்தகை வழங்கும் சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தின் மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டுள் ளதுடன் சில காணிகளுக்காக பின்னர் அரசாங்கத்தின் மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக்கொள்ளப்படாத காணிகள் மற்றும் கட்டிடங்களுக்காக அரசாங்க மதிப்பீட்டு அறிக்கை வேண்டிக் கொள்ளப்பட்டது. மதிப்பீட்டு அறிக்கையின் அடிப்படையில் குத்தகைப் பணத்தை அதிகரிப்பதற்குத் தேவையான நிபந்தனைகள் | அரசாங்கத்தின் பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டு பெறுமதிக்கு இணங்க காணிகள் மற்றும் கட்டிடங்களை குத்தகைக்கு வழங்குதல் மற்றும் வெளியாருக்கு வழங்குதல் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் உரிய குத்தகை உடன்படிக்கையை முறைப்படியாக திருத்தம் செய்து குத்தகையை அறவீடு செய்வதற்கு தேவையான ஏற்பாடுகள் உடன்படிகசையில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். |

| | |
|---|---|
| காணிகள் மற்றும் கட்டிடங்களின் எண்ணிக்கை 93 இற்கு மத்தியில் 62 காணிகள் மற்றும் கட்டிடங்களுக்காக மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு குத்தகைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை ல. அவ்வாறே அந்த காணிகள் மற்றுடம் கட்டிடங்களுக்காக நிர்ணயிக்கப்பட்டவாறு குத்தகை அறவீடு செய்தலும் இடம்பெற்றிருக்கவில்லை | உள்ளடக்கப்படாத 32 குத்தகை உடன்படிக்கைகள் உள்ளன. அந்த நிபந்தனைகள் இல்லாத உடன்படிக்கைகளுக்காக அரசாங்கத்தின் மதிப்பீட்டினை ஈடுபடுத்தி குத்தகை அறவீடு செய்ய முடியாது. வழக்கு நடவடிக்கைகள் காணப்படுகின்ற குத்தகை உடன்படிக்கைகள் சம்பந்தமாக நிர்ணயிக்கப்பட்டவாறு குத்தகையை அறவீடு செய்ய முடியாதுள்ளது. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

**3.1.1 செயல்நடவடிக்கையும் மீளாய்வும்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் தலைமை அலுவலகம் மற்றும் அதன் தோட்டங்களில் பயன்படுத்தப்படுகின்ற 06 வாகனங்கள் இலங்கை அரசாங்க பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமானதாக இருந்த போதிலும் அந்த வாகனங்களை மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் அந்த வாகனங்களுக்கு மத்தியில் 02 வாகனங்கள் 2024 ஆம் அண்டு மே மாத்திலிருந்து திருத்தம் செய்வதற்காக ஒரு கராஜில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. | ஜனவசமவும் அரசாங்க பெருந்தோட்ட கூட்டுத்தாபனமும் ஒரே முகாதைமத்துவத்தினால் முகாமைத்துவம் செய்யப்பட்ட காலத்தில் இந்த வாகனங்கள் சபையினாலும் பெருந்தோட்ட கூட்டத்தாபனத்தினாலும் பயன்படுத்தப்பட்டன. வாகனங்களைப் பொறுப்பேற்பதற்காக அரசாங்க பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திடம் 2023 ஆம் ஆண்டின் போது எழுத்து மூலம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தும் இன்றுவரை பதில் கிடைக்கவில்லை. அரசாங்க பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் உரிமை உள்ள 06 வாகனங்னகள் மாத்திரம் சபையினால் பயன்படுத்தப்படுகின்றது. | சபையினால் பயன்படுத்தப்படுகின்ற ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்களை பொறுப்பேற்பதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அந்த வாகனங்களை வினைத்திறனாகப் பயன்படுத:துவதற்கும் தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **(ஆ)** | சபைக்குச் சொந்தமான 17 தோட்டங்களில் காணப்படுகின்ற நிருவாகப் பலவீனங்கள், சபைக்கு பாதகமான வகையில் உடன்படிக்கை செய்தல், நிகழ்கால மதிப்பீட்டுப் பெறுமதிக்கு சொத்துக்கள் வாடகை அடிப்படையில் வழங்கப்படாமை, வருமானங்களை நாளதுவரையாக சேகரிகப்பதில் பலவீனங்கள் மற்றும் பிழையான கொடுப்பனவுகள் முதலிய ஒழுங்கீனங்கள் உள்ளடங்கலாக அந்த தோட்டங்கள் சிறப்பாக முகாமைத்துவம் செய்யப்படாமை, பழைய இயந்திரங்களைப் பயன்படுத்துதல் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினால் காணப்படுகின்ற பலவீனங்களின் அடிப்படையில் நீண்டகாலமாக நட்டம் அடையும் நிலையில் காணப்படுவதுடன் 17 தோட்டங்களில் 06 ஆண்டுகளுக்கான நட்டம் ரூபா 80 மில்லியனுக்கும் ரூபா 540 மில்லியனுக்கும் இடைப்பட்டதாகும். | தோட்டங்களினால் சரியாக நிர்ணயிக்கப்பட்ட கமத்தொழில் நடைமுறைகளைப் பின்பற்றாமை, தேயிலைக் கொழுந்துகளுக்காக ஆகக் குறைந்த லிலை கிடைத்தல், தொழிற்சாலைகளின் இயந்திரங்கள் 100 ஆண்டுகளுக்கு மேல் பழைமையாகயிருத்தல் போன்ற காரணிகளின் அடிப்படையில் நட்டம் ஏற்பட்டுள்ளது. 2020 இலிருந்து 2023 வரரையான காலத்தில் கொழுந்து வருமானம் பிரதானமாக குறைவடைந்ததானது இரசாயனப் பசளைகள் பயன்படுத்துதல் நிறுத்தப்பட்டதன் மூலம் கொழுந்துகளின் விளைச்சல் குறைவடைந்தமையாகும். தோட்ட ஊழியர்களின் சம்பளத்தை 25% ஆல் அதிகரிதத்தன் மூலம் நாட்டில் ஒப்பீட்டளவில் உற்பத்தி செய்த தேயிலைகளின் விலையைவிட உற்பத்திக் கிரயம் அதிகரித்தல் மற்றும் வேலையாட்களின் சம்பளம் ரூபா 500 இலிருந்து ரூபா 1000 வரை அதிகரித்தல், இது தொடர்பான ஊழியர் பணிக்கொடை மற்றும் நியதிச்சட்ட படிக்கொடுப்பனவுகளின் பெறுமதியும் ஊழியரகளின் பணிக்கொடைக்காக ஒதுக்கீடு செய்யும் பெறுமதியும் அதிகரித்தல் ஆகிய விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நட்ட நிலைமை உருவாகியுள்ளது. | முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறையை பின்பற்றி சிறந்த முகாமைத்துவத்துடன் உற்பத்திக் கிரயத்தை குறைந்த மட்டத்தில் பேணுவதற்கும் தேயிலை கொழுந்து வருமானத்தை அதிகரிக்கச் செய்வதற்கும் தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) இலங்கை கணக்கீட்:டு நியமம் இலக்கம் 41 இன் 12 ஆம் பந்தியின் பிரகாரம் உயிரியல் விஞ்ஞான சொத்துக்களை தொடக்கத்தில் அடையாளங்காணும் போதும் மற்றும் ஒவ்வொரு அறிக்கையிடல் காலப்பகுதியின் இறுதியிலும் விற்பனைக்கான செலவுகளைக் குறைத்ததன் பின்னர் நியாயமான பெறுமதிக்கு அளவீடு செய்யப்பட வேண்டிய போதிலும் மரப் பயிர்ச் செய்கையின் பெறுமதி அவ்வாறு மதிப்பீடு செய்யப்பட்டு ஏடுகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | வணிகரீதியான மரங்களின் நியாயப் பெறுமதியை நிர்ணயிப்பதற்காக தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்திடமிருந்து மதிப்பீட்டினைப் பெற்று அதனை வெளிப்படுத்துதல் மேற்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மரங்களை விற்பனை செய்யும் போது அல்லது அகற்றும் போது அதற்காக இடம்பெற்ற விற்பனைக் கிரயத்தை மரங்களின் விற்பனை வருமானத்தினிலிருந்து கழித்து காட்டுதல் தற்பொழுது மேற்கொள்ளப்படுகின்றது. உயிரியல் விஞ்ஞான சொத்துக்களின் (மரங்கள்) மதிப்பீட்டுப் பெறுமதியை 2024 ஆம் ஆண்டின் போது சரியாக கணக்குகளில் செம்மையாக்குதல் மேற்கொள்ளப்படும் என 2021 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு இலக்கம் 5.5 இன் கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ளதுடன் அதற்கிணங்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். இப்பெறுமதிகளை தோட்டங்களின் கணக்குகளில் சரிசெய்து செம்மையாக்கல் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அதற்காக போதியளவு காலம் தேவை என்பதனால் இவ்வாறு 2024 ஆம் ஆண்டிற்கு செம்மையாக்குவதற்கு நடவடிக்கை | உயிரியல் விஞ்ஞான சொத்துக்களை சரியாக மதிப்பீடு செய்து ஏடுகளுக்குகு கொண்டு வருதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | எடுக்கப்பட்டுள்ளது. 2023 திசெம்பர் மாதம் வரை வணிகரீதியான மரங்களின் விற்பனை வருமானம் ரூபா 356.97 மில்லியனாக உள்ளது. | |
| (ஆ) | 2021 ஆகஸ்ட் 27 ஆந் திகதி பொது முகாமையாளரினால் பச்சை தேயிலை கொழுந்துகளின் விலையை 05 சதவீதத்தினால் குறைத்துள்ளதாகவும் குறைப்பதற்கு பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது எனவும் செப்தெம்பர் மாதத்தின் போது அந்த விலைத் திருத்தங்களின் அடிப்படையில் தேயிலை கொழுந்துகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்து ஒரு தனியார் நிறுவனத்தின் பொது முகாமையாளருக்கு ஒரு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டிருந்தும் விலையை திருத்தம் செய்வதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்திருக்காததுடன் பொது முகாமையாளரின் அந்த தீர்மானத்தின் அடிப்படையில் விலையை திருத்தம் செய்ததன் காரணமாக சபைக்கு ரூபா 1,093,049 நட்டம் ஏற்பட்டிருந்தது. | 2021-08-27 ஆந் திகதிய ப.க பொது முகாமையாளரின் கடிதத்தின் மூலம் ஹற்றன் பெருந்தோட்ட கம்பனிக்கு 2021 செப்தெம்பர் மாதத்தில் தேயிலைக் கொழுந்திற்காக 5% ஆன இந்த விலைக் குறைப்பிற்காக மேற்கூறிய கடிதத்தில் 2021-08-26 ஆந் திகதி பணிப்பாளர் சபை அங்கீகாரம் கிடைத்துள்ளது என குறிப்பிடப்பட்டிருந்தும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைக்கவில்லை. | முறையான அங்கீகாரத்துடன் மாத்திரம் தேயிலைக் கொழுந்தின் விலையை குறைப்பதங்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் முறையான அங்கீகாரமின்றி இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களின் மூலம் சபைக்கு ஏற்பட்ட நட்டத்தை அறவீடு செய்வதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனிக்கு சபையினால் 2012 ஏப்ரல் மாதத்திலிருந்து 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை குத்தகை வாடகையை அறவீடு செய்வதற்காக சபையின்காணிப் பிரிவின் மூலம் இன்வொயிஸ் மற்றும் கடிதங்கள் வழங்கப்பட்டிருந்தும் அதற்கிணங்க 2022 சனவரி 31 ஆந் திகதி வரை அவ்வாறு நிலுவையாக இருந்த குத்தகைப் பணம் குத்தகைக் காணிப் பிரிவின் பிரகாரம் ரூபா 23,292,240 | எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனி என்ற பெயரில் கணக்குப் பிரிவில் காணப்பட்ட கிடைக்க வேண்டிய ரூபா 8,723,921 மீதி எல்கடுவ நிறுவனம் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபையின் தலைமை அலுவலகத்தில் செயற்பட்டிருந்த காலத்தில் செலுத்த வேண்டிய கட்டிட வாடகை மற்றும் அக்காலப்பகுதியில் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் | நிலுவயான குத்தகைப் பணத்தை சரியாக கணக்கீடு செய்து துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் புதிய மதிப்பீட்டுக் பெறுமதியின் அடிப்படையில் குத்தகை உடன்படிக்கையை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆக இருந்ததுடன் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவையாக இருந்த குத்தகைப் பணமானது கணக்குப் பிரிவின் பிரகாரம் ரூபா 8,723,921 ஆக இருந்தது. சபையினால் நிலுவையாகவிருந்த குத்தகைப் பணத்தை சரியாக அடையாளங்கண்டு ஆவணப்படுத்துதல் செய்யப்படாதிருந்ததுடன் 2020 யூன் 20 ஆந் திகதி அரசாங்க மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் குத்தகை ஆதனம் தொடர்பாக ஒரு அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தும் கம்பனியுடன் புதிய குத்தகை உடன்படிக்கையை மேற்கொள்வதற்கு 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை சபை தவறியிருந்தது. | ஊழயிர்கள் எல்கடுவ பெருந்தோட்ட கம்பனிக்காக கடமைரீதிக்காக கிடைக்க வேண்டிய ஊதியங்களை உளளடக்கியதாகும்.<br><br>2012-05-01 ஆந் திகதியிலிருந்து எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனி 320 டார்லி வீதியில் 3182 சதுர அடியினைப் பயன்படுத்தியிருந்தும் குத்தகைப் பணம் செலுத:ததல் இடம்பெறறிருக்கவில்லை. ரூபா 23,292,940 மீதி 2022-01-31 ஆந் திகதி கிடைக்க வேண்டிய குத்தகைப் பணம் ஆனதுடன் ரூபா 23,292,940 பணம் எங்களின் கணக்குகளில் பதியப்பட்டிருக்கவில்லை. | |
| (ஈ) | ஒரு தனியார் கம்பனிக்கு சபையின் ஏ,டீ மற்றும் ஈ,எப் களஞ்சியங்கள் 2019 பெப்ரவரி 27 ஆந் திகதியிலிருந்து 2023 பெப்ரவரி 26 ஆந் திகதி வரையான 04 ஆண்டுகள் காலத்திற்காக மாதாந்த குத்தகையின் அடிப்படையிக் கீழ் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் காணப்படுகின்ற குத்தகை உடன்படிக்கைக்கு இணங்க முறையே 13,760 சதுர அடி மற்றும் 10,089 சதுர அடிகளான இகளஞ்சியம் ஒரு சதுர அடிக்கு ஒரு மாதத்திற்கு ரூபா 27.50 வீதம் முழுக் குத்தகைப் பணம் ரூபா 31,480,680 பெறுமதிக்கு மற்றும் மாதாந்த குத்தகைப் பணம் ரூபா 378,400 மற்றும் ரூபா 277,447 ஆக குத்தகை உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இக்குத்தகை உடன்படிக்கையின் 1(vii) ஆம் உபபிரிவின் பிரகாரம் குத்தகைப் பணத்தை திருத்தம் செய்வதற்கு | தனியார் நிறுவனத்தின் கணக்கு 2024-07-31 ஆந் திகதி காணிப் பிரிவுடன் ஒப்பீடு செய்யப்பட்டு சரிசெய்தல் மேற்கொள்ளப்பட்டதுடன் அதற்கிணங்க 2024-07-31 ஆந் திகதியில் உள்ளவாறு மிஸ்டர் பேன்ட் நிறுவனத்திடமிருந்து கிடைக்க வேண்டிய மீதி ரூபா 4,617,227.50 தொகை கணக்குப் பிரிவின் மற்றும் காணிப் பிரிவின் பெறுமதியுடன் சமனானதாகும். எவ்வாறாயினும் 2023-12-31 ஆந் திகதியில் உள்ளவாறு கணக்குப் பிரிவின் பிரகாரம் மீதி ரூபா 4,751,820 ஆக இருந்ததுனால் மூன்று கணக்குகளும் தற்பொழுது செம்மையாக்கப்பட்டுன்னது . | மதிப்பீட்டுப் பெறுமதியின் அடிப்படையில் குத்தகை உடன்படிக்கை திருத்தம் செய்யப்பட்டு நிலுவையான குத்தகைப் பணத்தை அறவீடு செய்வதற்கு துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இயலுமை உள்ளது என்பதனால் 2020 யூன் 02 ஆந் திகதி புதிய மதிப்பீட்டு அறிக்கையினைப் பெற்று ஒரு தனியார் கம்பனிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் புதிய மதிப்பீட்டின் பிரகாரம் குத்தகைப் பணத்தை செலுத்துதலினை அக்கம்பனி நிராகரித்து நீதிமன்ற நடவடிக்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே தொடக்க குத்தகைப் பணத்தை செலுத்துதலும் நிர்ணயிக்கப்பட்டவாறு இடம்பெற்றிருக்காததனால் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை கிடைக்க வேண்டிய முழுக் குத்தகைப் பணம் ரூபா 12,457,893 ஆக உள்ளது எனவும் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கணக்குப் பிரிவிற்கு இணங்க அது ரூபா 4,751,820 எனவும் காணிப்பிரிவிற்கு இணங்க அது ரூபா 4,485,000 எனவும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | | |
| (உ) | கந்தானை உடுவெலவிலுள்ள தேயிலை கொள்லனவு 13,500 கிலோ கிராம் ஆன தேயிலைத் தொழிற்சாலை அஸோக் ஜப்பான் (தனியார்) கம்பனிக்கு உடன்படிக்கை இலக்கம் 01 இன் கீழ் 2021-06-29 ஆந் திகதியிலிருந்து 2051-06-28 ஆந் திகதி வரை 30 ஆண்டுகளுக்கு ரூபா 6,240,000 வருடாந்த குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான நிலுவைக் குத்தகை ரூபா 17,960,000 ஆகும். அவ்வாறே குத்தகை உடன்படிக்கையின் 7.(ஊ) உப பிரிவின் பிரகாரம் இரண்டு மாத காலத்திற்கு குத்தகை செலுத்துதல் தவறவிடப்படுமாயின் குத்தகைக்கு வழங்கியவர் வேண்டிக்கொண்டாலும் | 2024/12/31 ஆந் திகதிக்கு முன்னர் அனைத்து நிலுவையான குத்தகைப் பணமும் செலுத்தப்படவில்லையாயின் உடுவெல தொழிற்சாலையை மீண்டும் ஜனவசமவிற்கு ஒப்படைக்கப்படும் என குத்தகைதாரர் தெரியப்படுத்தியுள்ளார். அதற்கிணங்க 2024-12-09 ஆந் திகதி தேயிலைத் தொழிற்சாலையை மீண்டும் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு ஒப்படைப்பதற்கும் நிலுவையான குத்தகைப் பணத்தை அறவீடு செய்வதற்காகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலுவைக் குத்தகை மற்றும் தாமதக் கட்டணத்தை அறவீடு செய்ய வேண்டியதுடன் உடன்படிக்கையின் பிரகாரம் பொறுப்பேற்கும் நடவடிக்கையும் தாமதமின்றி மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இல்லாது விடினும் குத்தகை தராரரினால் 5% தாமதக் கட்டணம் செலுத்த வேண்டிய போதிலும் அவ்வாறான எந்த கொடுப்பனவும் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை எனவும் குத்தகைதாரரினால் உரிய தொழிற்சாலையின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவில்லை எனவும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | | |
| (ஊ) | கிரேட்வெலி தோட்டத்தில் அமைந்துள்ள 20.5 ஹெக்டயர் காணி 2012 செப்தெம்பர் 12 ஆந் திகதியிலிருந்து 2042 செப்தெம்பர் 18 ஆந் திகதி வரையான 30 ஆண்டுகள் காலத்திற்காக ஒரு தனியார் கம்பனிக்கு ரூபா 840,000 வருடாந்த குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டின் பின்னர் கம்பனியால் குத்தகை கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் குத்தகை உடன்படிக்கைப் 06 ஆம் பிரிவின் iii ஆம் உபபிரிவின் பிரகாரம் குத்தகை பணம் செலுத்தாததன் அடிப்பமைடயில் ஆதனங்களை பொறுப்பேற்பதற்கு ஜனவசமவிற்கு இயலுமை காணப்பட்டிருந்தும் சபையினால் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான நிலுவையான குத்தகைப் பணம் காணிப்பிரிவின் பிரகாரம் ரூபா 10,855,404 ஆக இருந்த போதிலும் 2014 ஆகஸ்ட் 23 ஆந் திகதி இக்கம்பனி | காணிப் பிரிவின் பிரகாரம் 2022/2023 வருடாந்த குத்தகை உள்ளடங்கலாக நிலுவைப் பணம் ரூபா 10,855,404/= ஆகும். 2023/2024 ஆம் அண்டு இறுதியில் ரூபா 12,745,404/= ஆகும். இக்குத்தகை உடன்படிக்கை சம்பந்தமாக சில வழக்குகள் விசாரணை செய்யப்பட்டு வருவதுடன் கம்பனிக்காக பிரதிநிதிகள் பங்குபற்றியுள்ளனர். | நிலுவைக் குத்தகைப் பணத்தை அறவீடு செய்வதற்கு மற்றும் குத்தகை செலுத்தாமையின் அடிப்படையில் ஆதனங்களை பொறுப்பேற்பதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கலைக்கப்பட்டுள்ளது என கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தினால் தெரியப்படுத்தப்பட்டிருந்தது. | | |
| (எ) | மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான இலக்கம் 55/75 வொக்சோல் ஒழுங்கை கொழும்பு - 02 இல் அமைந்துள்ள 6,959 சதுர அடி அளவிலான அலுவலக வளவு விசேட அதிரடிப் படையின் (STF) தங்குமிட வசதிகளுக்காக 2020 ஆகஸ்ட் 21 ஆந் திகதியிலிருந்து 2 ½ ஆண்டுகள் காலம் வரை 64.66 சதுர்ர அடி வீதமான. வகையில் மாதாந்தம் ரூபா 450,000 தொகைக்கு 05 ஆம் இலக்க குத்தகை உடன்படிக்கையின் கீழ் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டு உடன்படிக்கை தொடர்பான குத்தகைப் பணத்தை அறவீடு செய்தல் 2020 ஒக்தோபர் 21 ஆந் திகதியிலிருந்து அமுல்ப்படுத்தப்பட்டிருந்தும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை எந்த குத்தகைப் பணமும் இக்குத்தகைதாரரிடமிருந்து அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. 2023 திசெம்பர 31 ஆந் திகதியளவில் இந்த நிலுவைக் குத்தகைப் பணமானது காணிப் பிரிவிற்கு இணங்க அது ரூபா 2,100,000 எனவும் கணக்குப் பிரிவிற்கு இணங்க அவ்வாறான பணம் அறவீடு செய்வதற்கு இல்லை எனவும் அவதானிக்கப்பட்டது. | காணிப் பிரிவிற்கு இணங்க ரூபா 2,100,000 அறவிட வேண்டிய மீதியானது கணக்குப் பிரிவில் இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கிணங்க கணக்குப் பிரிவில் விசேட அதிரடிப் படைக்குரிய கணக்கினை அவதானிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுத்து மீதி தொடர்பாக மீண்டும் பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலுவை வரிப்பணத்தை அறவீடு செய்வதற்கு மற்றும் அறவீடு செய்ய வேண்டிய மீதி சம்பந்தமாக கணக்கிணக்கம் செய்து சரியான பெறுமதியை அடையாளங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு வதிவிட வசதிகள் வழங்குவதற்காக 2021 ஆகஸ்ட் 01 ஆந் தகிதியிலிருந்து 2022 யூலை 30 ஆந் தகிதி வரையான | ரூபா 4,330,000 தற்பொழுது செலுத்தி முடிவடைந்துள்ளது. குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் மூலம் 2023-12-31 ஆநட் திகதி ஜனவசமவினால் அறவிட வேண்டிய தொகை காணி | நிலுவையான கட்டிட வாடகையை உறுதிப்படுத்தி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒரு ஆண்டு காலத்திற்காக குத்தகை உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்காக இணக்கப்பாட்டிற்கு வந்து அதற்காக 2021 ஏப்ரல் 22 ஆந் திகதி அரசாங்க மதிப்பீட்டுத் திணைக்களத்திடமிருந்து இக்கட்டிடத்தின் தள மாடி ரூபா 1,240,000 தொகைக்கும் இரண்டாம் மாடி ரூபா 535,000 தொகைக்கும் மற்றும் கட்டிடத்தின் மேல் மாடி ரூபா 200,000 தொகைக்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2021 ஆகஸ்ட் 01 ஆந் திகதியிலிருந்து குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் இக்கட்டிடத்தில் வசித்திருந்தும் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை குத்தகைப் பணம் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க நிலுவையான குத்தகைப் பணம் கணக்குகள் பிரிவிற்கு இணங்க ரூபா 7,065,711 எனவும் காணிப் பிரிவிற்கு இணங்க அது ரூபா 4,330,000 எனவும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | பிரிவிற்கு இணங்க ரூபா 4,330,000 மற்றும் கணக்குப் பிரிவிற்கு இணங்க 7,065,711 ஆக உங்கள் ஐய வினாவில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கிணங்க இரண்டு பிரிவுகளிலும் மீதிகளில் வித்தியாசம் காணப்படுவதனால் கணக்குப் பிரிவின் மீதியை மீண்டும் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஐ) | டி.பீ ஜாயா மாவத்தையில் அமைந்துள்ள கட்டிடங்கள் மற்றும் 01 ஏக்கர் 02 ரூட் 24 பேச்சர்ஸ் அளவிலான காணி 2007 திசெம்பர் 28 ஆந் திகதியிலிருந்து 2060 திசெம்பர் 17 ஆந் திகதி வரை 53 ஆண்டுகள் காலப்பகுதிக்கு ஒரு தனியார் நிறுவனத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் முழுமையான குத்தகைப் பணம் ரூபா 822,487,500 ஆகும். அதற்கிணங்க அக்கம்பனி 2020 ஆம் ஆண்டு வரை சபைக்குச் செலுத்த வேண்டிய குத்தகைப் பணம் ரூபா 240,000,000 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 187,521,881 | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 49,000,000 தொகை நிலுவையாக உள்ளது. அதில் ரூபா 08 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளதுடன் குத்தகைப் பணம் தவணை ரீதியாக செலுத்தப்பட்டு வருகின்றது. நிறுவனம் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையுடன் ஏற்படுத்திக் கொண்ட குத்தகை உடன்படிக்கைக்கு இணங்க வீதவரியானது அவர்களால் நகரசபைக்கு செலுத்துதல் வேண்டும். அவர்களால் செலுத்த வேண்டிய வீத வரிப் | நிலுவை மீதியினை அறவீடு செய்வதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் முறையான அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் நிலுவை குத்தகைப் பணத்தை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்தப்பட்டுள்ளதுடன் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை குத்தகைப் பணம் ரூபா 52,478,119 ஆக இருந்தது. எவ்வாறாயினும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 28,000,000 குத்தகையினைப் பதிவழித்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தும் அது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட பணிப்பாளர் சபை அங்கீகாரத்தினை உள்ளடக்கிய முறைப்படியான அங்கீகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய குத்தகை கணக்குகள் பிரிவிற்கு இணங்க ரூபா 22,018,383 எனவும் காணிகள் பிரிவிற்கு இணங்க அந்த நிறுவனத்திடமிருந்து எந்த தொகையும் அறவீடு செய்வதற்கு இல்லை எனவும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | பணம் நகரசபைக்குச் செலுத்தப்பட்டு எங்களுக்கு பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்படும் வரை அது அவர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய பணமாக எங்களால் இக்குத்தகைதாரரின் குத்தகை கணக்கினூடாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. குத்தகைதாரரினால் அந்த வீத வரியினைச் செலுத்தி எங்களுக்கு பற்றுச்சீட்டு சமர்ப்பித்ததன் பின்னர் அப்பெறுமதியும் இக்கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளதனால் 2023-12-31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 22,018,383 மீதி காட்டப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் வீதவரி கட்டணத்தை செம்மையாக்கி இக்கணக்கிலிருந்து நீக்கி குத்தகைதாரரிடமிருந்து கிடைக்க வேண்டிய குத்ததகைப் பணத்தை மாத்திரம் கணக்குகளில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஓ) | ஹந்தானை தோட்டத்திற்குச் சொந்தமான 01 ஏக்கர் 1.3 பேர்சஸில் அமைந்துள்ள தேயிலைத் தொழிற்சாலை மற்றும் காணி 2001 சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து 30 ஆண்டுகள் வரை 1236 ஆம் இலக்க குத்தகை உடன்படிக்கைக்கு இணங்க தொடக்க வருடாந்த குத்தகைப் பணம் ரூபா 150,000 இன் கீழ் இலங்கை தேயிலை சபைக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. 2001 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரை ரூபா 31,500,000 குத்தகைப் பணம் இலங்கை தேயிலைச் சபையிடமிருந்து அறவிட வேண்டிய போதிலும் 2003 ஆம் ஆண்டில் மக்கள் | இலங்கை தேயிலைச் சபையின் சட்ட உத்தியோகத்தர், ஜனவசம சட்ட உத்தியோகத்தர், நிலைய பரிசோதனையை மேற்கொண்டுள்ளார்கள். இது தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது. எவ்வாறாயினும் அத்தொழிற்சாலை இலங்கை தேயிலை சபைக்கு இன்றுவரை ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிட வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளை தீர்த்துவைத்தல் அல்லது தேயிலைச் சபைக்கு உரிய காணியை ஒப்படைப்பதன் மூலம் கடன் மற்றும் குத்தகை கொடுக்கல் வாங்கலினை தீர்த்துவைப்பதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தோட்ட அபிவிருத்திச் சபையினால் ஊழியர் சம்பளத்தை செலுத்துவதற்காக ரூபா 25,000,000 பணம் தற்காலிகமாக கடனாக தேயிலைச் சபையிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததனால் அதற்கான வட்டிப் பணத்தையும் சேர்த்து ரூபா 114 மில்லியன் செலுத்த வேண்டும் எனவும் இக்கடன் தொகை மற்றும் இன்று வரை ஒன்று சேர்த்துள்ள வட்டிக்கு எதிரீடு செய்வதற்காக மேற்கூறிய காணியை தேயிலைச் சபையின் ஜனவசம/காணி/2020/2/12 ஆம் இலக்க 2020 பெப்ரவரி 27 ஆந் திகதிய பணிப்பாளர் சபை கூட்டத்தின் மூலம் இணங்கி கொள்ளப்பட்டிருந்தும் முறைப்படியாக காணியை ஒப்படைக்கும் அல்லது குத்தகைப் பணத்தை அறவீடு செய்யும் நடவடிக்கை 2024 திசெம்பர 31 ஆந் தகிதி வரை இடம்பெற்றிருக்கவில்லை. | | |
| (ஓ) | சபைக்குச் சொந்தமான ஒரு கட்டிடம் உயர் தொழில் நுட்ப கலவி நிறுவனத்திற்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டு 2012 ஆம் ஆண்டிலிருந்து 2023 ஆம் ஆண்டு வரை அறவீடு செய்ய வேண்டியுள்ள ரூபா 112,160,392 தொகையில் ரூபா 94,982,553 கிடைத்துள்ளது எனவும் திருத்தம் செய்யும் கட்டணமாக ரூபா 1,030,400 மற்றும் சிலாபம் பெருந்தோட்ட கம்பனிக்கு ரூபா 7,368,458 வீதம் கிடைக்க வேண்டிய பணத்தில் கழித்து 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 8,779,000 தொகை அறவீடு செய்ய வேண்டியுள்ளது என கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்தும் | ஜனவசமவிற்கும் உயர் கல்வி தொழில்நுட்ப நிறுவனத்திற்குமிடையேயான உடன்படிக்கை காலம் முடிவடைந்துள்ளதனால் புதிய குத்தகை உடன்படிக்கையின் வரைபு தயாரிக்கப்பட்டுள்ளது. உடன்படிக்கை இல்லாததனால் அப்பணம் கொடுப்பனவு செய்யப்படவில்லை. தெரியப்படுத்தப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக முறையான ஆவணங்கள் மற்றும் அறிக்கைகள் கோவையில் உள்ளன. குத்தகைப் பணத்தை அறவீடு செய்வதற்காக உயர் கல்வி அமைச்சு மற்றும் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சின் | அறவீடு செய்வதற்கு உள்ள நிலுவையான குத்தகைப் பணத்தை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இக்கொடுக்கல் வாங்கல சம்பந்தமாக முறையான ஆவணங்கள் மற்றும் அறிக்கைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாததுடன் அறவீடு செய்ய வேண்டியுள்ள பணத்தை துரிதமாக அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயலாளர்களின் கலந்துரையாடலின் அடிப்படையில் கொடுப்பனவு செய்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்குமாறு அத்தரப்பினர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டது. | |
| (ஔ) | சபையினால் 2020 ஆம் ஆண்டிலிருந்து சேதனப் பசளை தயாரித்தல், கோபி, பயிர்ச் செய்கை, தென்னை, பாக்கு, மரக்கறி பயிர்ச்செய்கை முதலியவற்றினை மேற்கொள்வதற்காக விசேட செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்தி அதற்கு தேவையான பொருட்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 32,109,795 செலவு செய்யப்பட்டிருந்தது. 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அச்செயற்திட்டத்திடமிருந்து பெற்ற வருமானம் ரூபா 5,629,070 மாத்திரம் ஆனதுடன் சாத்தியவள ஆய்வின்றி ஆரம்பிக்கப்பட்ட இச்செயற்திட்டம் தற்பொழுது முழுமையாக நிறுத்தப்பட்டுள்ளதனால் அதற்காக சபைக்கு ரூபா 26,480,725 நட்டம் ஏற்பட்டிருந்தது. | சபையினால் 17 தோட்டங்களுக்கான சேதனப் பசளைகள் ஒரு விசேட செயற்திட்டமாக ஆரம்பித்துவைக்கப்பட்டுள் ளதுடன் அப்பசளைகளை விற்பனை செய்வதற்காக ரூபா 32,109,795 வீதம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள து. எவ்வாறாயினும் அச்செயற்திட்டம் வெற்றியளித்திருக்காததுட ன் இது விளைவற்ற செலவாகும். பசளைகளை தோட்டகளின் தேயிலைப் பகுதிக்காக போடுவதற்கு சபை நடவடிக்கை எடுத்துள்ளது. | விசேட செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்தும் போது முறையான திட்டங்கள் மற்றும் ஆய்வுகளை அமுல்ப்படுத்துதல் வேண்டும். சபைக்கு எற்பட்டுள்ள நட்டம் சம்பந்தமாக நி.பி 135 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (க) | சபைக்குச் சொந்தமான காணிகள், கட்டிடங்கள் மற்றும் ஆதனங்களை வாடகை அடிப்படையில் வெளித்தரப்பினர்களுக்கு ஒப்படைக்கும் போது ஏற்படுத்திக்கொள்ளும் உடன்படிக்கைகளுக்காக 1 சதவீதம் வழக்கறிஞர் கட்டணம் அறவிடப்படுவதுடன் அக்கட்டணத்தில் 50 சதவீதம் சபைக்கும் 30 சதவீதம் முகாமையாளர், சட்டங்கள் மற்றும் விதிகள் ஆலோசகருக்கும், ஐக்கிய | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் இக்கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது. | அரசாங்க நியதிச்சட்ட சபைகளுக்குரிய செலவுகள் திறைசேரியின் சட்ட விதிகளுக்கு இணங்க முறையான அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

நலன்புரி நிதியத்திற்கும் மற்றும் பௌத்த நிதியத்திற்கும் 10 சதவீத படியும் செலுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் உடன்படிக்கைளின் பிரகாரம் சபைக்கு பெற்ற வழக்கறிஞர் கட்டணம் ரூபா 16,587,095 ஆக இருந்ததுடன் அப்பணத்தில் ரூபா 4,036,335 தொகை முகாமையாளர் (சட்டம்) மற்றும் விதி ஆலோசகருக்கும் ரூபா 1,691,052 வீதம் ஐக்கிய நலன்புரிச சங்கத்திற்கும் மற்றும் பௌத்த சங்கத்திற்கும் வழங்கப்பட்டிருந்தது. சபையின் சொத்துக்களிலிருந்து உழைத்த வருமானங்கள் சபையின் சம்பளங்கள் மற்றும் படிகளை பெற்றுக்கொள்ளுகின்ற சில உத்தியோகத்தர்களுக்கும் வழக்கறிஞர்களுக்கும் மற்றும் இரண்டு நிதியங்களுக்கும் பகிர்ந்தளிப்பதற்காக வழங்கிய பணிப்பாளர் சபை அங்கீகாரம் கணக்காய்வின் போது சிக்கலுடையதானதுடன் இக்கொடுப்பனவுகளுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகள் சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கு இணங்கவும் முறைப்படியாகவும் இடம்பெறாமையின் காரணமாக தொடர்ச்சியாக வெளித்தரப்பினர்களால் சபைக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்படுகின்ற பல நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளதுடன் 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகள் தொடர்பாக முறையே ரூபா 6,989,201, ரூபா 22,083,370 மற்றும் ரூபா

| | | | |
|---|---|---|---|
| | 17,786,692 தொகைகள் ஆக வெளித்தரப்பினர்களுக்கு சட்ட கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (கா) | சபையினால் நிதிச்சட்ட கொடுப்பனவுகளை முறைப்படியாக மேற்கொள்ளாமையினால் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய ஊழியர் சேமலாப நிதிய மற்றும் உழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்கள், தோட்ட ஆளணியினரின் சேமலாப சங்கங்கள், இலங்கை பெருந்தோட்டக்காரர்களின் சேமலாப சங்கங்களுக்கான பங்களிப்பு பணம் மற்றும் பணிக்கொடையின் பெறுமதி ரூபா 2,883,430,734 ஆக இருந்தது. | நிறுவனத்தில் காணப்பட்ட தீவிர தொழிற்படு மூலதன பற்றாக்குறையினால் 2000 ஆம் ஆண்டிலிருந்து மாத்திரம் EPF/ETF இனை தொடர்ச்சியாக செலுத்த முடியாதிருந்ததுடன் நிதி அமைச்சிடமிருந்து சில ஆண்டுகளில் இந்த நிலுவையான நியதிச்சட்ட பணக் கொடுப்பனவுகளுக்காக நிதிகள் வழங்கப்பட்டுள்ளன. அதற்கிணங்க அப்பணத்திலிருந்து கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கு மேலதிகமாக 2023 ஆம் ஆண்டில் 23/0768/616/017 ஆம் இலக்க அமைச்சரவை பத்திரத்திற்கு இணங்க ரூபா 30 மில்லியன் பணம் ஒவ்வொரு மாதமும் இந்த நிலுவையான நியதிச்சட்ட படிகள் மீண்டும் செலுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும் 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் மற்றும் 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொர்றுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் 2023 யூலை மாத்திலிருந்து நிகழ்கால நியதிச்சட்ட கொடுப்பனவுகள் நிறுவனத்தின் பணத்திலிருந்து முறைப்படியாக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | நியதிச்சட்ட கொடுப்பனவுகளை ஒழுங்குமுறையாக மேற்கொள்வதன் மூலம் சிக்கனமற்ற செலவுகளை தவிர்ப்பதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (கி) | 2020 திசெம்பர் 08 ஆந் திகதிய பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் சபையின் வருடாந்த புரள்வில் 0.25 சதவீதத்தினை (நிலம், கட்டிடம் மற்றும் மரங்களின் வருமானத்தை தவிர்த்து) ஈடுபடுத்தி ‘‘தலைவர் நலன்புரி நிதியம்’’ என்ற பெயரில் ஒரு நிதியம் தோற்றுவிக்கப்பட்டிருந்தும் நிதியத்தின் முகாமைத்துவ நடைமுறை மற்றும் சட்ட விதிகளை உள்ளடக்கி அதற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. சபை தொடர்ச்சியாக நட்டம் அடைந்திருந்தும் 2020 ஆம் ஆண்டிலிருந்து 2023 ஆம் ஆண்டின் இறுதி வரை இந்த நிதியத்திற்கு தலைமை அலுவலகம் மற்றும் தோட்டங்களிலிருந்து முறையே ரூபா 3,935,284 மற்றும் ரூபா 3,638,708 தொகைகள் செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் சபையின் குறிக்கோள்களுக்குப் புறம்பாக மற்றும் நிதியங்களை தோற்றுவிப்பதற்காக பெற்றுக்கொளளப்பட வேண்டிய அங்கீகாரமின்றி தோற்றுவிக்கப்பட்ட இந்த நிதியங்களிலிருந்து 2020 ஆம் ஆண்டு முதல் 2024 மே மாதம் வரை ரூபா 7,043,586 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் இதில் ரூபா 220,000 உபசரிப்பு செலவுகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன. இதற்கிணங்க அச்செலவுகளுக்காக அதிகாரமிளிக்கும் அங்கீகாரத்தினை வழங்குதல், சான்றுபடுத்துதல் மற்றும் கொடுப்பனவு செய்வதற்காக சம்பந்தப்பட்ட அனைத்து உத்தியோகத்தர்களும் | இந்த நிதியத்தை தோற்றுவிப்பதற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் இடம்பெற்றுள்ளதுடன் அந்த பணிப்பாளர் சபைத் தீர்மானத்தினை எடுக்கின்ற பணிப்பாளர் சபையினுள் வரிசை அமைச்சின் மற்றும் நிதி அமைச்சின் பிரதிநிதித்துவமும் இடம்பெற்றிருந்தது. | திறைசேரியின் சட்ட விதிகளுக்கு இணங்க முறையான அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் நிதியத்தினை தோற்றுவித்தல், நிதியத்திற்காக பங்களிப்புக்களை பெற்றுக்கொள்ளல், செலவு செய்தல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிதிப்பிரமாணம் 135 இற்கு இணங்க பொறுப்புக் கூற வேண்டும் என கணக்காய்வின் போது மேலும் அவதானிக்கப்பட்டது. | | |
| (கீ) | 2007 ஆம் ஆண்டின் போது நாகஸ்தென்ன தோட்டம் நீண்டகால குத்தகை அடிப்படையில் ஒரு தனியார் கம்பனிக்கு வழங்கப்பட்டதன் பின்னர் அந்த நிறுவனத்திடமிருநது அறவிட வேண்டிய ரூபா 2,176,683 தொகை 12 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக வணிக மற்றும் ஏனைய பெறவேண்டியவைகளாக நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்பட்டிருந்தும் காணிப் பிரிவிலிருந்து பெற்ற தகவல்களின் பிரகாரம் 2009 ஆம் ஆண்டின் போது சபையினால் அந்த தோட்டத்தை மீண்டும் பொறுப்பேற்றதன் காரணமாக 2024 யூன் 30 ஆந் திகதியில் உள்ளவாறு அக்கம்பனிக்கு செலுத்த வேண்டிய பணம் ரூபா 21,986,330 ஆக இருந்தது. | நாகஸ்தென்ன தோட்டம் ஒரு தனியார் நிறுவனத்திற்கு 2007 ஆம் ஆண்டின் போது நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டது. காணிப் பிரிவிலிருந்து பெற்ற தகவல்களின் பிரகாரம் அக்கம்பனியுடன் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையும் இணங்கி கொண்டவாறு 2009-12-22 ஆந் திகதி வரை எங்களால் நாகஸ்தென்ன தோட்டத்தினை மீண்டும் பொறுப்பேற்றதன் காரணமாக அக்கம்பனிக்கு செலுத்த வேண்டிய பணம் ரூபா 24,551,713.66 ஆகும். அந்த இணக்கப்பாட்டின் பின்னர் சபையினால் ரூபா 1000,000 தொகை அந்த நிறுவனத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதுடன் அதற்கு மேலதிகமாக நாகஸ்தென்ன தோட்டத்தின் தேயிலைக் கொழுந்துதாரர்களுக்கு விற்பனையிலிருந்து பெற்ற பணம் அவர்களால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந் ததுடன் அப்பணத்தை கழித்ததன் பின்னர் அவர்களுக்குச் செலுத்த வேண்டிய மிகுதி தொகை ரூபா 21,986,330 ஆகும். அக்கம்பனியின் 2024-06-24 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அவர்களுக்குச் செலுத்த வேண்டிய மீதி ரூபா 21,986,330 என உறுதிப்படுத்தப்பட்டது. | ஆதனங்களை குத்தகைக்கு வழங்குவதன் மூலம் கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வண்டிய மீதிகள் தாமதமின்றி தீர்த்துவைக்கப்படுதல் வேண்டும். |

## 3.3 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதி வரை சபையினால் தேயிலை மற்றும் இறப்பர் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்ட முழுக் காணியின் அளவில் 286.88 ஹெக்டயர் அனுமதியற்ற குடியிருப்பாளர்களால் சுவீகரிக்கப்பட்டிருந்தும் இன்றுவரை அக்காணியை சபையினால் பொறுப்பேற்பதற்கு தேவையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தனியே அனுமதியற்ற சுவீகரித்தலானது தோட்டத்தில் சேவையாற்றி ஓய்வுபெற்றுச் சென்ற ஊழியர்களால் மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதில் சில தடைகள் காணப்பட்டதுடன் வெளிநபர்களின் அனுமதியற்ற சுவீகரித்தல்களுக்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் தோட்ட அத்தியட்சகர்களின் மூலம் இந்த அனுமதியற்ற சுவீகரித்தல்களுக்காக சட்ட நடவடிக்கை எடுப்பத்கு தேவையான பின்னணி தயாரிக்கப்பட்டுள்ளது. | சபையின் தோட்டங்களில் குடியிருக்கின்ற அனுமதியற்ற நபர்கள் சம்பந்தமான சிக்கல்களை தீர்த்துவைப்பதற்கு முறையான ஒரு வேலைத்திட்டம் அமுல்ப்படுத்தப்படுதல் வேண்டும். |
| (ஆ) | சபையிடம் 1,951 ஹெக்டயர் வெற்று/ தருசு நிலங்கள் மற்றும் 1,288 காட்டு நிலங்கள் காணப்பட்ட போதிலும் அக்காணிகளை பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்காததுடன் தேயிலை பயிர்ச் செய்கைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள காணிகளின் அளவில் 77.40 ஹெக்டயர்களும் சபையினால் கைவிடப்பட்டிருந்தன. | 2022 ஆம் ஆண்டிற்கு இணங்க சுட்டிக்காட்டப்பட்ட முதிர்ச்சியான தேயிலை மற்றும் இறப்பர் பயிர்ச் செய்கைகளுக்குரிய அளவு 76.1 ஹெக்டயர்களாக உள்ளது. | பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படாத காணிகளை பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையிடம் 15 தேயிலை தொழிற்சாலைகள் காணப்பட்டதுடன் தற்பொழுது 03 தொழிற்சாலைகள் | 03 தொழிற்சாலைகள் செயற்படும் மட்டத்தில் காணப்பட்டிருந்தும் அத்தொழிற்சாலைகளின் இயந்திரங்களின் | சபையினால் பயன்படுத்தப்படுகின்ற செயற்படும் நிலையில் காணப்படுகின்ற 03 தொழிற்சாலைகள் உச்ச |

மாத்திரம் செயற்படும் நிலையில் காணப்பட்டன. இந்த 03 தொழிற்சாலைகள் பூர்த்தியான தேயிலையை உற்பத்தி செய்வதற்காக பயன்படுத்தப்படுகின்ற போதிலும் இத்தொழிற்சாலைகளின் கொள்ளளவினை பரீட்சித்த போது சபையின் மூலம் செயற்படுத்தப்படுகின்ற தொழிற்சாலைகளுக்கு பூர்த்தியான தேயிலையை உற்பத்தி செய்வதற்கு தேவையான பச்சை தேயிலை கொழுந்துகளை சபையின் தோட்டங்களிலிருந்து வழங்குவது மிகவும் பலவீனமான நிலையில் காணப்படுகின்றது எனவும் அதாவது ஒரு ஆண்டுக்கு இருநூறு நாட்கள் ஒரு தொழிற்சாலை செயற்படும் நிலையில் காணப்படுகின்றது என்று எடுத்துக்கொள்கையில் ஒரு தொழிற்சாலைக்கு ஒரு நாளுக்கு கிடைக்கின்ற பச்சை தேயிலை கொழுந்துகளின் அளவு 3,390 கிலோ கிராம் என அவதானிக்கப்பட்டது. எனவே தொழிற்சாலைகளின் கொள்ளளவில் மிகவும் சிறிய அளவு மாத்திரம் பயன்படுத்தப்படுவதனால் கொள்ளளவினை உச்ச மட்டத்தில் பயன்படுத்துவதற்கு எடுக்ககூடிய நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

தொழில்நுட்பம் நாளதுவரையாக்கப்படாமையால் உயர்ந்த தேறிய விற்பனை விலை கிடைக்கின்ற தரமான தேயிலை உற்பத்தியை வழங்குவதற்கு சபை தவறியுள்ளதுடன் குறைந்த தேயிலை விலை கிடைப்பதனால் ஏனைய தோட்டங்களிலிருந்து சபையின் கொழுந்துகளை வழங்குவதன் மூலம் மேற்கூறிய தோட்டங்கள் நட்டம் அடையும் நிலைமைக்கு அதிக வாய்ப்பு உள்ளதனால் சபையின் தொழிற்சாலைகளுக்கு தேயிலை கொழுந்துகளை வழங்குவது இடம்பெறவில்லை. தற்பொழுது 03 தொழிற்சாலைகள் உள்ள தோட்டங்களிலிருந்து அந்த தோட்டங்களின் தேயிலை கொழுந்துகள் மாத்திரம் உற்பத்தி செயன்முறைக்கு ஈடுபடுத்தப்படுவதுடன் சராசரியாக இரண்டு நாட்களுக்கு ஒரு தடவை உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.. குறைந்த கொள்ளளவினால் உற்பத்திகளின் பொது செயற்பாட்டுச் செலவுகள் அதிகரித்துள்ளது.

2022 - 2023 ஆண்டுகளில் தீவிரமான நிதி சிக்கல் மற்றும் பசளை விலை 300% ஆல் அதிகரித்ததன் அடிப்படையில் தோட்டங்களுக்கு பசளைகள் வழங்காமையால் தேயிலை கொழுந்துகளின் அளவு ஒப்பீட்டு ரீதியாக குறைவடைந்ததன் காரணமாகவும் நாளாந்த உற்பத்தி இயலளவு குறைவடைந்துள்ளது.

இயலளவுடன் திருத்தங்களைமேற்கொண்டு பயன்படுத்தப்பட வேண்டியதுடன் தோட்டங்களின் விளைதிறனை அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

## 3.4 ஆளணி நிருவாகம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2018 பெப்ரவரி 20 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் 02 II ஆம் பந்திக்கு இணங்க உரிய அமைச்சு செயலாளரின் தனிப்பட்ட சிபாரிசின் அடிப்படையில் தேவையான பதவிகளுக்காக மாத்திரம் ஒரு ஓய்வுபெற்ற உத்தியோகத்தரினை 12 மாத உச்ச அளவு காலத்திற<br><br>கு உட்பட்டு அங்கீகரித்த ஒரு பதவியில் சேவையில் ஈடுபடுத்தலாம் என்ற போதிலும் 2021 பெப்ரவரி 01 ஆந் திகதியிலிருந்து 2022 சனவரி 31 ஆந் திகதி வரை ரூபா 55,000 படியினையும் உத்தியோகபூர்வ இல்லத்தினையும் வழங்கி நேர்முகப் பரீட்சை இல்லாது ஒரு உத்தியோகத்தர் உதவி உள்ளகக் கணக்காய்வாளர் பதவியில் அமர்த்தப்பட்டிருந்தார். அவ்வாறே அமைச்சு செயலாளரின் சிபாரிசு இல்லாது 2023 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 60 வயதினை மிகைத்த 10 உத்தியோகத்தர்கள் இந்த உத்தியோகத்தர் உள்ளடங்கலாக சேவையாற்றியிருந்ததுடன் அவர்களுக்கு 2023 ஆம் ஆண்டின் போது ரூபா 1,397,148 தொகை சம்பளமும் படிகளுமாக செலுத்தப்பட்டிருந்தது. | இந்த உதவி உள்ளக கணக்காய்வாளரின் மூலம் நிறுவனத்தின் அதிக அளவான வேலை பகுதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் தோட்ட கணக்காய்வுத் துறையில் 30 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அனுபத்தைக் கொண்டிருந்ததனால் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை, கணக்கு நடவடிக்கைகள், மென் பொருளை நாளதுவரையாக்குதல் நடவடிக்கை என்பவற்றிற்காக அவரின் உதவி தொடர்ச்சியாக கிடைக்கும். மெலம் தற்பொழுது நிறுவனத்தில் 60 வயதினை மிகைத்த ஒரு செயற்திட்ட உத்தியோகத்தர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுளார். மேலும் நியமனக் கடிதத்தில் உத்தியோகபூர்வ இல்லம் வழங்குதல் தொடர்பாக குறிப்பிடப்படவில்லை. | சபையின் வினைத்திறனை அதிகரிப்பதற்கு அங்கீகரித்த பிரமாணங்களின் அடிப்படையில் மாத்திரம் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டில் அங்கீகரித்த ஆளணியில் இல்லாத ஒரு உத்தியோகத்தர் நேர்முகப் பரீட்சையின்றி 2020 யூன் 01 ஆந் திகதிய தலைவரின் | 2017 ஆம் ஆண்டின் போது அங்கீகரித்த மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் ஊழியர் திட்டத்திற்கு முகாமையாளர் | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கிடைத்த பதவிக்கான அங்கீகரித்த சம்பளங்கள் மற்றும் படிகளின் அடிப்படையில் மாத்திரம் |

கடிதத்தின் பிரகாரம் தோட்டப் பிரிவின் முகாமையாளர் பதவிக்கு நியமித்து ரூபா 70,000 மாதாந்த படி 2020 செப்தெம்பர் மாத்திலிருந்து 2022 ஒக்தோபர் மாதம் வரை செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே 2022 ஒக்தோபர் 17 ஆந் திகதிய JEDB/ES/EXPF/544 ஆம் இலக்க தலைவரின் கடிதத்தின் பிரகாரம் மேற்கூறிய உத்தியோகத்தர் தோட்ட அத்தியட்சகராக பதவியுயர்வு செய்யப்பட்டிருந்தும் ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் அப்பதவிக்குத் தேவையான தகமைகளும் அவரினால் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில் லை. தோட்ட அத்தியட்சகர் பதவிக்கு தகமையுள்ள தொடக்க சம்பளம் ரூபா 68,835 ஆக இருந்த போதிலும் ரூபா 93,665 தொடக்க சம்பளத்துடன் அப்பதவி வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2022 நவம்பர் மாதத்திலிருந்து 2023 செப்தெம்பர் மாதம் வரை ரூபா 1,039,148 சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

அவ்வாறே 2020 செப்தெம்பர் மாதத்திலிருந்து 2023 திசெம்பர் மாதம் வரை அப்பதவிக்கு தகமையற்ற ரூபா 50,000 வீதம் ரூபா 1,991,167 தொகையான வாகனப் படியும் ரூபா 12,480 வீதம் ரூபா 992,810 தொகையான எரிபொருள் படியும் செலுத்தப்பட்டது. அவ்வாறே இப்பதவிக்கு தகமையற்ற ரூபா 5,000 தொலைபேசி படியும் 2022 பெப்ரவரியிலிருந்து 2023 திசெம்பர் வரை மொத்தமாக ரூபா 100,000 செலுத்தப்பட்டிருந்தது.

(பெருந்தோட்டம்) என்ற பதவி உள்ளடக்கப்படாமையால் 2020 ஆம் ஆண்டின் மே மாதம் 12 ஆந் திகதி நடைபெற்ற பணப்பாளர் சபை தீர்மானத்திற்கு இணங்க முகாமையாளர் (பெருந்தோட்டம்) பதவிக்காக ஒப்பந்த அடிப்படையில் அந்த உத்தியோகத்தர் சேர்த்துக்கொள்ளப்பட்டுள் ளார். உரிய பதவிக்காக தொடக்க தகமைகள் நிறைவேற்றப்படவில்லை. இப்பதவிக்காக ஆட்சேர்ப்பதற்கு பிரதானமாக உதவியாக இருந்தது உத்தேச செயற்திட்டம் சார்ந்த கடமைகளை முறைப்படியாக நிறைவேற்றுவதறகாக சேவையில் ஈடுபத்துவதற்கு நிறுவனத்தில் ஊழியர் இல்லை என்ற விடயம் காராணமாக இருந்தது நிறுவனத்தின் பணிப்பாளர் சபை எடுத்த தீர்மானத்தினை அமுல்ப்படுத்துவதற்காக மாத்திரம் மேற்கொள்ளப்பட்டது. இந்த உத்தியோகத்தர் தற்பொழுது தோட்ட அத்தியட்சகர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் வெற்றிடங்களை நிரப்புவது சம்பந்தமாக அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்திற்கு அமைச்சின் மூலம் தெரியப்படுத்தப்பட்டது. அந்த அறிவித்தல்களுக்கு கிடைத்த பதிலாக 2022-11-02 ஆந் திகதி அரசாங்க தொழில்

ஆட்சேர்பபு நடைமுறைக்கு இணங்க உத்தியோகத்தர்களை சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | | முயற்சிகள் திணைக்களத்தினால் செயலாளர் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சிற்கு தெரியப்படுத்தப்பட்டதானது தோட்ட அத்தியட்சகர் பதவிக்கு ஆட்சேர்த்தல் அத்தியவசியமானது என்பதனால் இந்த ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டது. 2022 நவம்பர் 08 ஆந் திகதி பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் தகமைகள் நிறைவேற்றப்படவில்லை. இந்த சம்பள அளவுத் திட்டமானது பணிப்பார் சபையின் அங்கீகாரமின்றி 2022 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டுள்ளதுடன் அது சம்பந்தமாக அரசாங்க நிருவாக அமைச்சிற்கும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கும் தெரியப்படுத்தப்பட்டது. | |
| (இ) | 2020 ஆகஸ்ட் 26 ஆந் திகதிய தலைவரின் கடிதத்தின் பிரகாரம் மேற்கூறிய உத்தியோகத்தர் மேற்கூறிய பதவிகளில் இருக்கும் போதே பதில் கடமை பொது முகாமையாளராக நியமிக்கப்பட்டிருந்த போதிலும் பொது முகாமையாளர் பதவிக்கு தேவையான தகமைகள் அவரிடம் இருக்கவில்லை. 2023 ஆகஸ்ட் மாதத்திலிருந்து 2024 யூலை மாதம் வரை இந்த உத்தியோகத்தருக்கு மாதாந்தம் ரூபா 35,000 வீதம் வேலையாள் படியும் மாதாந்த ரூபா 30,000 வீதம் வீட்டு வாடகை படியும் செலுத்தப்பட்டது. | பொது முகாமையாளர் பதவிக்காக ஆட்சேர்பப்தற்கு பத்திரிகை அறிவித்தலினை வெளியிட்டு ஆட்கள் நேர்முகப்பரீட்சைக்காக அழைக்கப்பட்டதுடன் தகமையுள்ள நபர்கள் இல்லாததனால் உரிய பதவிகளுக்காக ஒரு உத்தியோகத்தரை சேர்த்துக்கொள்ள முடியாதுள்ளது. இதனால் தகமைகள் கருத்தில் கொள்ளாது பொது முகாமையாளர் பதவிக்காக சேர்த்துக்கொள்ளப்பட்டது. அதற்கிணங்க உரிய சேர்த்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு | தாபன விதிக்கோவையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்கிய வகையில் பதில் கடமை நியமனங்களை வழங்குவதற்கும் கொடுப்பனவு செய்வற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பொது முகாமையாளர் பதவிக்கான தகமைகள் இருக்கவில்லை. 2023 யூலை மாதத்திலிருந்து 2024 மார்ச் மாதம் வரை ப.க. பொது முகாமையாளரர் படியினைச் செலுத்துவதற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் இல்லாததுடன் அது அங்கிகாரமின்றி செலுத்தப்பட்டது. தொழில்லாளர் படியும் வீட்டு வாடகைப் படியும் அப்போதிருந்த தலைவரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பணிப்பார் சபைக்கு பத்திரம் அனுப்பிவைக்கப்பட்டு அங்கீகாரத்தினைப் பெற்று கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது. அன்று வரை ஹந்தானை தோட்டத்தின் மூலமும் இந்த உத்தியோகத்தருக்கு தோட்ட பங்களா வழங்கப்பட்டது. | |
| (ஈ) | அங்கீகரித்த ஆளணியில் இல்லாத தலைவரின் தனிபட்ட உதவியயாளர் என்ற பெயரிலான MM 1-1 சம்பள தொகுதி மற்றும் படிகளுடனான பதவியில் கடமையை நிறைவேற்றுவதற்காக தலைவர் பிரிவின் அந்தரங்க செயலாளர் (JM1-1 தொகுதி) 2021 ஒக்தோபர் 15 ஆந் திகதியிலிருந்து அமுலுக்குவரும் வகையில் சபையின் தலைவரினால் நியமனம் வழங்கப்பட்டிருந்தது. 2021 ஒக்தோபர் 15 ஆந் திகதியிலிருந்து 2023 திசெம்பர் மாதம் வரையான காலத்திற்காக சம்பளம், எரிபொருள ் படி, போக்குவரத்துப் படி, விசேட படி, என்பவைகளை | நிறுவனத்தின் செயலாளர் பதவியானது பொது முகாமையாளர் பிரிவிற்கு இணைத்துக்கொள்ளப்பட்டு பொது மகாமையாளர் பிரிவின் கடமைகள் மேற்கொள்ளப்படுவதுடன் நிறுவனத்தின் உயர்ந்த மட்டத்திலுள்ள நிறைவேற்று உத்தியோகத்தராக அமைச்சு க்கள், திணைக்களங்கள், மற்றும் நிறுவனத்தின் ஏனைய பிரிவுகளுடன் தகவல்களை ஒருங்கிணைப்புச் செய்தல் போன்ற நடவடிக்கைகள் பொது முகாமையாளர் அலுவலகத்தினால் மேறகொள்ளப்படுவதுடன் அங்கீகரித்த செயலாளர் பதவியானது பொது முகாமையாளர் | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைத்த பதவிகளுக்கான அங்கீகரித்த சம்பளங்கள் மற்றும் படிகளின் அடிப்படையில் மாத்திரம் ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு இணங்க உத்தியோகத்தர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

உள்டக்கி ரூபா 4,501,905 தொகை அந்தரங்க செயலாளர் பதவியில் சேவையாற்றிய உத்தியோகத்தருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2021 யூன் 10 ஆந் திகதிய DMS/1696/Vol-V ஆம் இலக்க கடிதத்தின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு ஒரு அந்தரங்க செயலாளர் மற்றும் தலைவரின் தனிப்பட்ட உதவியாளர் பதவியை உருவாக்குவது சம்பந்தமாக இணங்கிக்கொள்ள முடியாது என்று தெரிவிக்கப்பட்டது. அவ்வாறே 2023 நவம்பர் 01 ஆந் திகதியிலிருந்து பணிபபாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் இந்த உத்தியோகத்தர் முகாமையாளர் - நுகர்வோர் பதவிக்கு தர அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தார்.

கனிஷ்ட முகாமையாளர் (JM) சேவை தரத்தில் உரிய துறையிலுள்ள ஒரு பதவியில் ஆகக் குறைந்தது 05 ஆண்டுகள் திருப்தியான சேவைக் காலத்தை பூரணப்படுத்தியிருத்தல் ஆகக் குறைந்த தகமையாக இருந்த போதிலும் அத்தகமை உத்தியோகத்தரிடம் இருக்கவில்லை. இந்த நியமனத்திற்காக உள்ளக விண்ணப்பதாரர்களிலிருந்து சேர்த்துக்கொள்வதற்கு விருப்பம் தெரிவித்த அனைத்து உத்தியோகத்தர்களும் தெரிந்து கொள்ளக்கூடிய வகையில் அறிவித்தல் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்காத போதிலும் இரண்டு விண்ணப்பதாரர்கள் இப்பதவிக்கு பிழரிவிற்கு இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டின் போது அப்தோதைய முகாமையாளர் - நுகர்வோர் தபிவயினை வகித்த உத்தியோகத்தர் ஒய்வுபெற்றுச் சென்றதனால் உரிய ஆட்சேர்ப்பு பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அதன் போது உரிய பதவிக்காக JM 1-1 தரத்தில் உள்க உத்தியோகத்தரை சேர்த்துக்கொள்வதற்கு அங்கீகாரம் கிடைத்திருந்தது. உரிய வேண்டுதல் சம்பந்தமாக பெருந்தோட்ட அமைச்சில் அதே போல அரசாங்க தொழில் முய்றிசகள் திணைக்களத்தின் அங்கீகாரம் கடைத:துள்ளது. அவ்வாறே இது சம்பந்தமாக நிறுவனத்தின் இணையதளத்திலும் நிறுவன வளவிலும் அறிவித்தல்கள் வெளியிடப்பட்டு நேர்முகப் பரீட்சையை நடாத்தி அதன் போது கிடைத்த புள்ளிகளின் அளவினைக் கொண்டு பணிப்பாளர் சபைக்கு உரிய தீர்மானம் சமர்ப்பித்ததன் பின்னர் பணிப்பாளர் சபையும் தீர்மானத்தை அங்கீகரித்து இந்த உத்தியோகத்தர் முகாமையாளர் (நுகர்வோர்) பதவிக்கு 2023-11-01 ஆந் திகதியிலிருந்து நியமக்கப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| | விண்ணப்பித்திருந்தார்கள். அதன் போது தகமையை பெற்றிருந்த விண்ணப்பதாரருக்கு புள்ளிகள் வழங்கப்படாது இந்த விண்ணப்பதாரருக்கு அதிக புள்ளிகள் வழங்கி நியமனம் அந்த உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டிருந்தது. | | |
| (உ) | சபையில் வெற்றிடமாக உள்ள பொது முகாமையாளர், முகாமையாளர் பெருந்தோட்டம், நிருவாக உத்தியோகத்தர், முகாமையாளர் வழங்கல்கள், ஆராய்ச்சியும் அபிவிருத்தியும், உதவி உள்ளக கணக்காய்வளார் ஆகிய பதவிக் சபையின் நாளாந்த கடமைகளை நிறைவேற்றுவதற்கு அத்தியவசியமானவையாக இருந்த போதிலும் அப்பதவிகளுக்கு உத்தியோகத்தர்களைச் சேர்த்துக்கொள்ளும் தேவைப்பாட்டினை அடையாளங்கண்டு பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காது அவ்வப்போது அப்பதவிகளன் கடமைகளை நிறைவேற்றுவதற்காக ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்ததனால் சபையின் உள்ளகக் கட்டுபாட்டு நடைமுறைக்கும் செயற்பாட்டு நடைமுறைக்கும் அது நேரடியாக பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. | மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் பதவிக்காக உத்தியோகத்தர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சிற்கு வேண்டுதல்கள் அரசாங்க தொழில் முய்றிசகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுளது. பொது முகாமையாளர் பதவிக்கு 2023 ஆம் ஆண்டில் அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் ஏனைய பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான ஆட்சேர்ப்புக்கள் பிரதம மந்திரி குழுவின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொளள வேண்டியுள்ளது. 2024-07-25 ஆந் திகதி பிரதம மாத்திரி குழுவின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. அதற்கிணங்க அங்கீகாரம் கிடைத்த பொது முகாமையாளர், முகாமையாளர் ( பெருந்தோட்டம்), உதவி உள்ளக கணக்காய்வளார் பதவிகளுக்காக பத்திரிகை அறிவித்தல்கள் வெளியிடப்பட்டு மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்காக ஆயத்தம் செய்யப்பட்டுள்ளது. | சபையின் செயற்திறனையும் வினைத்திறனையும் அதிகரிப்பதற்கு தேவைப்படுகின்ற பதவிகளுக்காக அங்கீகரித்த சட்ட விதிகளுக்கு இணங்க ஆளணியினரைச் சேர்த்துக்கொள்வதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |